செ.வெ.எண்: 476 நாள்: 30.07.2019

# புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.டி.சாந்தி அவர்கள் தலைமையில் ”மருத்துவமனை தின விழா” நடைபெற்றது.

---

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் **”மருத்துவமனை தின விழா”** மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.டி.சாந்தி அவர்கள் தலைமையில், புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மீனாட்சிசுந்தரம் முன்னிலையில் இன்று (30.07.2019) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவ தினம் கொண்டாட ஆணையிட்டார்கள். அந்த வகையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் இந்தியாவின் முதல் பெண் மருத்துவரான டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி அவர்களின் பிறந்த தினமான இன்று 30.07.2019 மருத்துவ தினமாக கொண்டாட அறிவுருத்தி உள்ளார்கள்.

இன்றைய தினம் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ”மருத்துவமனை தினம் விழா” கொண்டாடப்படுகிறது. இவ்விழாவை முன்னிட்டு மருத்துவத்துறையில் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் தங்கள் மருத்துவமனையில் செயல்பாடுகள், சாதனைகள் மற்றும் சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையில் இந்நிகழ்வு அமைந்துள்ளது.

தமிழகத்தில் வேறு எந்த மாவட்டத்திற்கும் இல்லாத சிறப்பாக இந்தியாவின் முதல் பெண் மருத்துவரான டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள் பிறந்த ஊர் என்ற சிறப்பினை பெற்றுள்ளது. குறிப்பாக சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனை துவங்க காரணமாக இருந்தவரும் பல்வேறு சமூக பணிகளை

செய்து பெண்ணினத்திற்கும் மட்டுமல்லாமல் தமிழகத்திற்கே சிறப்பு சேர்த்த டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி அவர்களின் பெருமை போற்றுதலுக்குறியது.

இந்நிகழ்ச்சியின் வாயிலாக மருத்துவத்துறையில் சாதனைகள் குறித்த கலை நிகழ்ச்சிகளும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிறப்பாக பணியாற்றி வரும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நினைவு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது. இவ்வாறு மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.டி.சாந்தி அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் திலகவதியார் திருவருள் ஆதீனம் தயானந்த சந்திரசேகர சுவாமிகள், கம்பன் கழக செயலாளர் சம்பத்குமார், வெங்டேஷ்வரா மெட்ரிக் பள்ளி தாளாளர் தங்கம்மூர்த்தி, மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவக்கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**